இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 19-03-2025

# நீதியரசர்களின் எதிர்ப்பு

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ என்ற முறையை முன்னாள் நீதியரசர்கள் தொடர்ந்து எதிர்த்து வருகிறார்கள். இந்த எதிர்ப்பானது நாளுக்குநாள் அதிகம் ஆகி வருகிறது.

பா.ஜ.க. எம்.பி.யான பி.பி. சவுத்ரி தலைமையிலான நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 17, 2024 அன்று மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு (129 ஆவது திருத்தம்) மசோதாவை மதிப்பாய்வு செய்து வருகிறது. இந்த மசோதா மக்களவைக்கும் அனைத்து மாநில சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்த தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் அளிக்க முயல்கிறது. இதற்கு முன்னாள் நீதியரசர்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

“ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் கூட்டாட்சிக்கு எதிரானது, அரசியல் சாசனத்தின் அடிப்படைக்கு எதிரானது” என்று - ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.பி.ஷா நேற்றைய தினம் கூறி உள்ளார்.

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ தொடர்பான நாடாளுமன்றக் கூட்டுக் குழுவில் தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளார் டெல்லி உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.பி.ஷா. “ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாக்கள் சட்ட சிக்கல்களைக் கொண்டதாக உள்ளன. மாநில சட்டப்பேரவைகளின் தேர்தலை எப்போது நடத்த வேண்டும் என்ற அதிகாரத்தை தேர்தல் ஆணைத்திற்கு வழங்குவது சரியானதல்ல. ஒரே நாடு ஒரே தேர்தல் மூலம் செலவு குறையும் என்ற வாதமும் சரியானது அல்ல” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே, உச்சநீதிமன்ற நீதிபதிகள் யு.யு.லலித், ரஞ்சன் கோகோய் ஆகியோர் ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாக்களுக்கு எதிராக கருத்தினை பதிவு செய்துள்ளனர்.

**முன்னாள் இந்திய தலைமை நீதிபதியும் மாநிலங்களவை உறுப்பினருமான ரஞ்சன் கோகோய், ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ மசோதாவில் உள்ள ஓட்டைகளை சுட்டிக்காட்டி இருக்கிறார். ‘தேர்தல் ஆணையத்திற்கு (EC) அட்டவணையை முடிவு செய்ய கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்குவது நல்லதல்ல’ என்றும் அவர் எச்சரித்து உள்ளார். “ஒரு மாநில சட்டமன்றத்தின் பதவிக் காலத்தை நீட்டிக்க அல்லது குறைக்க தேர்தல் ஆணையத்திற்கு கட்டுப்படுத்தப்படாத அதிகாரங்களை வழங்க முடியாது” என்று அவர் கூறினார்.**

உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் யு.யு.லலித், “ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவது, செயல்படுத்துவது கடுமையான சட்ட சவால்களை எதிர்கொள்ளும். அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களை திருத்தங்கள் மூலம் மாற்ற முடியாது. கேசவானந்த பாரதி தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மாநில சட்டமன்றங்களின் பதவிக் காலத்தைக் குறைப்பது அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பை மீறும். ஒரு மாநில சட்டமன்றத்தின் பதவிக்காலத்தில் 30-40 சதவீதம் இன்னும் நிறைவடையவில்லை என்றால், அதன் பதவிக் காலத்தைக் குறைப்பது அரசியலமைப்பிற்கு விரோதமானது. அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளபடி, மாநில சட்டமன்றங்களின் சுயாதீன அந்தஸ்தையும் அவற்றின் ஐந்து ஆண்டு பதவிக்காலத்தையும் பாதுகாக்கும் பல சட்ட முன்மாதிரிகள் உள்ளன.

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ மசோதா அவசரமாக செயல்படுத்தப்பட்டால், மசோதா ரத்து செய்யப்படலாம், இது சட்ட நிச்சயமற்ற தன்மை மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும்” என்று யு.யு.லலித் கூறி இருக்கிறார்.

**நீதியரசர்களுக்கு முன்பாகவே முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் எஸ்.ஒய்.குரேஷி தனது எதிர்ப்பை பதிவு செய்துவிட்டார். “ஒரே நாடு - ஒரே தேர்தல் என்று இப்போது சொல்பவர்கள் ‘ஒரே நாடு - ஒரே கட்சி என்று ஏன் கூடாது?’ என்று நாளை கேட்கலாம். பிறகு, ‘ஒரே நாடு - ஒரே தலைவர் ஏன் கூடாது?’ என்றும் சொல்லலாம். அவ்வாறு கிளம்பினால் அதற்கு முடிவே இல்லை. பா.ஜ.க.வின் தேசியவாதம் எங்கே போய் முடியும்? ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதால்தான் அதிகமான செலவு ஆகும். தேர்தலுக்கான மிஷின்களும், கருவிகளும், ஆட்களும், பாதுகாப்பும் ஒரே நேரத்தில் தேவைப்படுவதால் செலவு அதிகமாகத் தான் ஆகும்” என்று கருத்துச் சொல்லி இருந்தார்.**

**இந்தியாவின் ஜனநாயக குரல்வளையை நெரிக்கும் இந்த சட்டத்தை ஆரம்பம் முதல் எதிர்த்து போராடி வருகிறது மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க.**

**இந்தச் சட்டம் குறித்து “கூட்டாட்சிக்கு எதிரான, நடைமுறைக்கு மாறான ஒரே நாடு ஒரே தேர்தலை இந்தியா கூட்டணி எதிர்க்கும். ஏனெனில், அது நாட்டின் ஒற்றை ஆட்சி வடிவத்தை அபாயத்தில் தள்ளும். பன்முகத்தன்மை மற்றும் ஜனநாயகத்தின் செயல்பாட்டை கொன்றுவிடும். குடியரசுத் தலைவர் தேர்தலை நடத்தும் வகையில் உள்நோக்கத்துடன் பா.ஜ.க. அரசு செயல்படுகிறது. இது நமது அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது.” என மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறார்கள்.**

ஒரே நாடு ஒரே தேர்தல் - நாடாளுமன்றத் தொகுதி வரையறை நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு தேர்தல் - ஆணையர்களின் நியமனங்கள் - தேர்தல் ஆணையர் தேர்வு சட்டத்தில் மாற்றம் என பா.ஜ.க. தலைமை செய்வது அனைத்தும் மர்மமாகவே இருக்கிறது. இது ஏதோ அரசியல் ரீதியான விமர்சனம் அல்ல. உண்மையான விமர்சனங்கள் தான் என்பதை முன்னாள் நீதியரசர்களும் உறுதி செய்கிறார்கள்.

## விண்வெளியில் இருந்து

# பூமிக்குப் புறப்பட்டார் சுனிதா!

## அமெரிக்காவில் இன்று தரை இறங்குகிறார்!

*கேப் கெனாவரெல், மார்ச் 19 -*

சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து டிராகன் விண்கலம் வெற்றிகரமாக பிரிந்து, பூமியை நோக்கி பயணிக்கத் தொடங்கியுள்ளது. இந்திய வம்சாவளியினரான அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் கடந்த ஜூன் 5ம் தேதி ஒருவார பயணமாக சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்திற்கு சென்றனர். அவர்கள் சென்ற போயிங் நிறுவனத்தின் புதிய ஸ்டார் லைனர் விண்கலத்தில் கோளாறு ஏற்பட்டது.

இதனால் அந்த விண்கலம் மட்டும் தனியாக பூமிக்கு திரும்பியது. சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் விண்வெளி நிலையத்தில் சிக்கிக் கொண்டனர். இதற்கிடையே, சுனிதா, வில்மோர் மற்றும் ஏற்கனவே விண்வெளி நிலையத்தில் தங்கியுள்ள மற்ற விண்வெளி வீரர்களுக்கு மாற்றாக 4 பேர் கொண்ட புதிய குழுவுடன் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த விண்கலம் நேற்று முன்தினம் சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தது. அங்கு புதிய குழுவினரை சுனிதா உள்ளிட்ட வீரர்கள் கைகுலுக்கி விண்வெளி நிலையத்திற்கு வரவேற்றனர்.

இந்நிலையில், 9 மாதங்களுக்குப் பிறகு சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் உட்பட 4 வீரர்கள் இன்று விண்வெளியில் இருந்து பூமிக்கு புறப்பட உள்ளதாக நாசா அறிவித்துள்ளது. அதன்படி சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து டிராகன் விண்கலம் வெற்றிகரமாக பிரிந்து, பூமியை நோக்கி பயணிக்கத் தொடங்கியுள்ளது. ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் 9 விண்கலம் மூலம் சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட 4 விண்வெளி வீரர்கள் பூமியை நோக்கி பயணத்தை தொடங்கினர்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து டிராகன் விண்கலம் விண்வெளி நிலையத்தில் இருந்து பிரிந்தது. இந்திய நேரப்படி இன்று அதிகாலை 3.27 மணிக்கு அமெரிக்காவின் புளோரிடாவில் சுனிதா வில்லியம்ஸ் பூமியில் தரையிறங்குகிறார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முதல்வரின் முகாம் அலுவலகத்தில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில இணைச் செயலாளர் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சி.ஜெரால்டு தமது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர்

# திருமதி பிரேமலதா விஜயகாந்த் பிறந்த நாள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் வாழ்த்து!

சென்னை, மார்ச் 19-

தே.மு.தி.க. பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி.பிரேமலதா விஜயகாந்த் அவர்களின் பிறந்தநாளையொட்டி, அவரை நேற்று (18.3.2025) தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## ஒரு அண்ணாமலை அல்ல;

# நூறு அண்ணாமலை வந்தாலும் சந்திக்கத் தயார்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு காட்டமான பதில்!

*சென்னை, மார்ச் 19-*

“ஒரு அண்ணாமலையல்ல; நூறு அண்ணாமலை வந்தாலும் சந்திப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஒரு கட்சித் தலைவர் போராடுகிறார், அவரை 5 மணி நேரம் ஒரு மண்டபத்தில் சிறையில் வைத்திருக்கிறார்கள். 5 மணி ஆகிவிட்டது, நான் விமானத்தை தவற விட்டு விட்டேன். ஊருக்குச் செல்வதற்கு மூன்று விமானங்கள் தடைபட்டுவிட்டது. ஆறு மணி ஆகிவிட்டது என்னையும் வெளியே விடு என்று காவல் துறையிடம் சண்டையிடுகிறார் அண்ணாமலை. நாட்டுக்காக போராடுவதாக கூறும் அண்ணாமலை 5 மணி நேரம் கூட போலீஸ் காவலில் இருக்க முடியாதா?” என்று அமைச்சர் பி.கே.சேகர் பாபு கேள்வி



எழுப்பினார்.

சேத்துப்பட்டில் முதலமைச்சர் பிறந்தநாள் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. இதில் அமைச்சர் சேகர்பாபு கலந்து கொண்டார். நிகழ்ச்சிக்குப் பிறகு அமைச்சர் பி.கே.சேகர்பாபு அளித்த பேட்டி வருமாறு:-

இந்த இயக்கம் இரண்டு மொழி போராட்டத்தை கண்ட இயக்கம், எமர்ஜென்சி கண்ட இயக்கம், இயக்கத்தை பிளவுபடுத்துகிற சக்திகளை மீறி வளர்ந்த இயக்கம், பல ஆண்டுகள் ஆட்சியில் இல்லை என்றாலும் கொள்கைக்காக சமரசம் செய்து கொள்ளாத இயக்கம்.

இந்த இயக்கம் ஆட்சிக் கட்டிலில் இருப்பதால், ஆட்சி என்ற கண்ணாடித் தொட்டியை கையில் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதனால் பாதுகாப்பாக கண்ணாடித் தொட்டிக்கு சேதம் வராமல் நடந்து கொண்டிருக்கிறோம். உரையினுள் இருந்தாலும் வாள், வாள்தான்.

எப்போது போர் என்று வருகிறதோ தி.மு.க. என்ற வாள் உறையினுள் இருந்து வெளிவரும் என்பதை அண்ணாமலை போன்றோருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**டிரான்ஸ்பரில் இறக்குமதி செய்யப்பட்ட தலைவர் அல்ல!**

டிரான்ஸ்பரில் வந்த கட்சி அல்ல இந்த கட்சி. டிரான்ஸ்பரில் இறக்குமதி செய்யப்பட்ட தலைவர் அல்ல எங்கள் தலைவர். தமிழக மண்ணில் அனைத்துப் போராட்டத்தையும் களத்தில் நின்று இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கும் தலைவர். எந்தத் தொண்டனை நோக்கி ஒரு அடி யாராவது தாக்க முற்பட்டால், பத்தடி முன்னேறி தாக்குகின்ற கூட்டம் எங்கள் கூட்டம்.

உத்தரப்பிரதேசத்தில் பா.ஜ.க. ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. அங்கே போய் முதலில் ஆணி அடித்து முதலில் முதல்வர் யோகியின் படத்தை மாட்டட்டும். நாங்கள் வேண்டுமானால் ஆணியை சப்ளை செய்கிறோம்.;அதற்கு பிறகு இங்கு வரட்டும்.

எங்கள் முதல்வர் திருமணமான ஓராண்டு காலத்தில் மிசாவில் கைதாகி ஓராண்டு காலத்தை சிறையில் கழித்தவர். அவரின் கால் தூசிக்குக் கூட தகுதியில்லாத உன் போராட்டம் இந்த தமிழக மண்ணில் எடுபடாது.

அண்ணா சொன்னது போல் அமைச்சர் பதவி என்பது தோளில் போட்ட துண்டு, கொள்கை என்பது எங்களது இடுப்பில் கட்டிய வேட்டி. துண்டா வேட்டியா என்று வருகிறபோது வேட்டிதான் பெரிது. ஆட்சி என்ற துண்டை உதறிவிட்டு ஒரு அண்ணாமலையல்ல நூறு அண்ணாமலை வந்தாலும் சந்திப்பதற்கு தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் பேட்டியளித்தார்.

## கடலூர் - மு.பட்டி கிராமத்தில்

# தி.மு.க. இளைஞரணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரை! அப்துல் மாலிக், மதுரை பாலா, எபினா மேரி பங்கேற்பு!

*கடலூர், மார்ச் 19-*

கடலூர் மேற்கு மாவட்டம், மு.பட்டி கிராமத்தில் தி.மு.க. இளைஞரணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம் நடைபெற்றது.

விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியின் தி.மு.க. இளைஞரணி சார்பில் மத்திய அரசைக் கண்டித்து விருத்தாசலம் வடக்கு ஒன்றியம் மு. பட்டி கிராமத்தில் பெரியார் திடலில்,16.3.2025, ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில், மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ் குமார் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாவாடை கோவிந்தசாமி, நகர செயலாளர் தண்டபாணி, ஒன்றியச் செயலாளர்கள் வேல்முருகன், சுரேஷ், ஆசைத்தம்பி, முன்னாள் எம்.எல்.ஏ. கலைச்செல்வன், மங்கலம்பேட்டை பேரூர் செயலாளர் பாத்திரக்கடை செல்வம், பொதுக் குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன்,

மாவட்ட இலக்கிய அணி தலைவர் பட்டி கருணாநிதி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அருள்குமார், ஒன்றிய துணை செயலாளர் தர்ம மணிவேல், நகர இளைஞரணி அமைப்பாளர் பொன் கணேஷ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் நடராஜன், தனசேகரன், அருண் பிரபாகர், வெங்கடேசன், அப்துல் அஜித், கிளைச் செயலாளர் தங்கதுரை, விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விருத்தாசலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கனக கோவிந்தசாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பட்டி மு.வசந்தகுமார் ஆகியோர் வரவேற்றனர். கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான சி.வி கணேசன், மண்டல பொறுப்பாளர் அப்துல்மாலிக், தலைமை கழக பேச்சாளர்கள் மதுரை பாலா, எபினா மேரி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டு, இந்தி திணிப்பு நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநிதி உள்ளிட்ட தலைப்புகளில் கண்டன உரையாற்றினர். இக்கூட்டத்தில் உறுதிமொழி ஏற்றனர். இக்கூட்டத்தில் இளைஞரணி நிர்வாகிகள் திருஞானம், சுபாஷ், வீரபாண்டியன், வாஞ்சிநாதன் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தங்க. நாராயணசாமி நன்றி கூறினார்.




கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் தொகுதி தி.மு.க. சார்பில் சோழவந்தானில் சோழவந்தான் கிரி ஏற்பாட்டில் மாபெரும் பொது மருத்துவ முகாம் மற்றும் ஆறாயிரம் பேருக்கு அசைவ விருந்து வழங்கும் விழாவினை வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தலைமையில் துவக்கி வைத்தார். உடன் திரளான கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.